செ.வெ.எண்:13 நாள்:06.08.2021

**நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் டாக்டர்.T.G..வினாய் இ.ஆ.ப., அவர்கள் இ-சேவை மையம் மற்றும் ஆவண காப்பகத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார். மாவட்ட ஆட்சியர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் உடன் இருந்தார்.**

நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் டாக்டர்.T.G..வினாய் இ.ஆ.ப., அவர்கள் இ-சேவை மையம் மற்றும் ஆவண காப்பகத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார். மாவட்ட ஆட்சியர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் உடன் இருந்தார்.

வட்டாட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள இ-சேவை மையத்தில் மக்களுக்கு வழங்கப்படும் சேவைகள், சாதி சான்றிதழ், இருப்பிட சான்றிதழ், வருமான சான்றிதழ், முதல் பட்டதாரி சான்றிதழ், வேலையில்லா பட்டதாரி சான்றிதழ், விதவை பெண் சான்றிதழ், தமிழ்நிலம்-முழு பட்டா மாற்றம், தமிழ்நிலம்-இணைப்பு பட்டா மாற்றம், தமிழ்நிலம்-உட்பிரிவு, தமிழ்நிலம - A பதிவேடு பிரித்தல், தமிழ்நிலம்-சிட்டா பிரித்தல், டாக்டர்.முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்பு திருமண திட்டம், மின்கட்டணம், வண்ண வாக்காளர் அடையாள அட்டை, ஆகிய பல்வேறு சேவைகள் மக்களுக்கு உடனுக்குடன் பயன்பாட்டில் கிடைக்கின்றனவா என ஆய்வு செய்தார். வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள ஆவண காப்பகத்தை ஆய்வு செய்து ஆவண காப்பகத்தில் உள்ள ஆவணங்களை சரியாக வைத்து பராமரிக்குமாறும், வட்டாட்சியர் அலுவலக ஊழியர்களுக்கு அறிவுறுத்தினார். இ-சேவை மையத்தில் ஆய்வு செய்து, பொது மக்களுக்கு உடனடியாகவும், விரைந்தும் பணிகளை முடித்து கொடுக்கும்படியாகவும் அறிவுறுத்தினார். மற்றும் நில அளவை மேலாண்மை மையத்தில் நில அளவை புலப்பட சுவடி பதிவேற்ற பணியினை நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் டாக்டர்.T.G..வினாய் இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார். பின்னர் நாகப்பட்டினம் மாவட்டம் அகரஒரத்தூர் கிராமத்தில் நவீன நில அளவை திட்டபணியினையும் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.வி.ஷகிலா, மண்டல துணை இயக்குநர் திரு.மு.ராஜாமணி, நில அளவை (திருச்சி மண்டலம்) திரு.பா.தவமணி, உதவி இயக்குநர் மாவட்ட நில அளவை, வருவாய் கோட்டாட்சியர் திரு.மணிவேலன் மற்றும் கீழ்வேளூர் வட்டாட்சியர் திரு.மாரிமுத்து, நாகப்பட்டினம் வட்டாட்சியர் திரு.ஜெயபால், திரு.மகேஸ் தலைமை நில அலவை, மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**